## ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் - 2017

ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய அதிகாரச்சட்டத்தின் (அத்தியாயம் 432) 5 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் பிரகாரம் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் 6 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது கருத்துக்களும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்ட கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகை மற்றும் வருமானச் செலவினக் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத அல்லது விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வடமேல், தென், கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் வட போன்ற மாகாணங்களின் பங்களிப்புப் பணம், நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிராததுடன் அவை பெறவேண்டிய பங்களிப்புப் பணமாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் சொத்துக்களின் கீழ் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் மீதியாக ரூபா 768,159,240 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதியை உறுதிப்படுத்துதற்காக மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) பிரிவெனாக்கள் மற்றும் தனியார் / பகுதியளவிலான அரச பாடசாலைகளின் விதவைகள், தபுதார்கள் மற்றும் அநாதைகள் பங்களிப்புத் தொகையாக 6 சதவீதமும் அவர்கள் அரச ஊழியர்களாக முழுமையாக ஏற்றுக்கொள்ளபடாமையால் அவர்களின் ஓய்வூதியத்திற்காக பங்களிப்பாக 6 சதவீதமுமாக 2 நோக்கங்களுக்காக பங்களிப்புத்தொகை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு கிடைக்கவேண்டும். எவ்வாறாயினும் கல்வி அமைச்சின் மூலம் மாதாந்த பொழிப்புக்களின் கீழ் செலவு அறிவித்தல் மூலம் 2017 ஆம் ஆண்டின் போது 8186 ஆம் இலக்க கணக்கிற்கு 3 மாகாணங்களிலிருந்து மாத்திரம் செலவு வைக்கப்பட்ட ரூபா 64,801,067 தொகை எந்த பங்களிப்பிற்காக செலவு வைக்கப்பட்டிருந்ததென திட்டவட்டமாக இனங்காண முடியாமல் இருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் விதிக்கப்பட்ட கட்டளை இலக்கம் 9(அ) கட்டளையின் பிரகாரம் ஒவ்வொரு உதவிப்பணம் செலுத்துபவர்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 131,957,353 மிகையாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 102,956,197 ஆக இருந்ததமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 29,001,156 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 13,220,729 ஆலும் பங்களிப்புப்பணப் பெறுவனவு ரூபா 20,102,114 ஆலும் அதிகரித்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதிய அதிகாரச்சட்டத்தின் 04 ஆம் இலக்க கட்டளையின் பிரகாரம் ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் பங்களிப்புப்பணத்தின் மூலம் நிதியமொன்றைக் கட்டியெழுப்பி அதன் மூலம் ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும் பங்களிப்புத் தொகையை சேகரிப்பதற்கும் செலவுகளை மேற்கொள்வதற்கும் வங்கிக் கணக்கொன்று பராமரிக்கப்படாமல் இருந்ததுடன் பங்களிப்புத் தொகை ஓய்வூதிய திணைக்களத்தின் விதவைகள், அநாதைகள் பங்களிப்புத் தொகை வங்கிக் கணக்கிற்கு (இலக்கம் 100199026658) சேகரிக்கப்பட்டிருந்தமை ஓய்வூதிய திணைக்கத்தின் செலவினத் தலைப்பின் கீழ் பாதீட்டு நிதி ஏற்பாட்டின் மூலம் மேற்படி செலவினத்தை மேற்கொண்டதன் காரணமாக இந்த நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை, மீளாய்வாண்டில் புதிய அங்கத்துவத்தைப் பெற்றவர்களின் எண்ணிக்கை, நிதியத்தின் அங்கத்துவத்திலிருந்து அகற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் அங்கத்தவர்களின் பெயர், பாடசாலைகள் உள்ளடக்கிய பட்டோலை என்பன பேணப்படாதிருந்தமையால் நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய பணம், பெறப்பட்ட பணம் மற்றும் நிலுவைப் பணம் தொடர்பான தகவல்களை கணக்காய்விற்கு வெளிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2008 சனவரி 30 ஆந் திகதிய 3/2008 ஆம் இலக்க ஓய்வூதிய விதவை, தபுதாரர் மற்றும் அநாதை சுற்றறிக்கையின் பிரகாரம், ஓய்வூதியத்திற்கான பங்களிப்புத் தொகை ஆரம்ப சம்பளத்திலிருந்தே ஆரம்ப மற்றும் இரண்டாம் மட்டத்திற்கு 6 சதவீதப்படி அறவிடப்பட வேண்டும். எனினும், தனியார் பாடசாலையொன்றான ஸ்ரீ சன்தாரந்த பௌத்த வித்தியாயலயத்தில் நிரந்தர ஓய்வூதியத்துடன் கூடிய ஆசிரியர்களிடமிருந்து விதவை அநாதை ஓய்வூதிய பங்களிப்பாக ரூபா 776,380 கிடைக்க வேண்டிய போதிலும், ஆரம்ப சம்பளத்தின் 2 சதவீதமாக ரூபா 258,793 மாத்திரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம், பங்களிப்பு தொகை ரூபா 517,587 குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது.

(இ) பங்களிப்புப்பணம் மீளச் செலுத்தும் போது பங்களிப்பாளர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணத் தொகையை வரலாற்றுத்தாளைப் பரீட்சித்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், அந்தப் பணம் சரியாக நிதியத்திற்குக் கிடைத்ததா என பரீட்சிப்பதற்கான முறையொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக ஓய்வூதிய திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. டன் யினால் கணக்கீட்டு கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டியிருந்தது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) நிதியத்தின் செயற்படு நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் வருமானங்களும் செலவினங்களும் கணக்கீடு செய்யப்படாதிருந்தமை. |
| | (ii) அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்குகள் பேணப்பட்டிருக்காமை |
| (ஆ) பங்களிப்புத் தொகை முகாமைத்துவம் | ஆசிரியர் ஓய்வூதிய நிதியத்திற்குரிய பங்களிப்புத் தொகை மற்றும் ஆசிரியர் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் பங்களிப்புத் தொகை வெவ்வேறாக இனங்காணாமல் இந்நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை கணக்கீடு செய்யப்படாமை. |